திரு. கரு. சீமைச்சாமி : கேள்வியைக் கேட்க, இவறறையெல்லாம் சொன்னால்தான் சரியாக வரும், சார் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி கேட்க அவற்றையெல்லாம் சொன்னால்தான் சரியாக இருக்கும் என்றால், கேள்வியை தாங்கள் கேட்க முடியாது. நீண்ட கேள்வியை கேட்கக் கூடாது என்று 31 (10) என்கிற விதியைக் காட்டியப் பிறகும், தாங்கள் அப்படிக் கேட்டால்தான் சரிப்படும் என்றால், நடைமுறை விதிக்கு எதிர்ப்புத் தெரிவிப்பது போல இருக்கிறது. முன்பே ஒரு முறை குறிப்பிட்டிருக்கிறேன் இதுபற்றி. இரண்டாவது முறையும் சொல்லியிருக்கிறேன். துணைக்கேள்வி கேட்கும் போது, தாங்கள் விரிவாகப் பேச ஆரம்பித்தால், இந்தப் பேரவையின் விலைமதிக்க முடியாத நேரத்தை விரயம் செய்கிறீர்கள் என்ற குற்றச் சாட்டு ஏற்படும் என்பதை தங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள கூட்டுறவு ஆலைகள் எவ்வளவு? அவைகளிலிருந்து உற்பத்தி செய்யப் படும் சர்க்கரை ஆண்டுதோறும் எவ்வளவு டன் என்று அறிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு இரா. நெடுஞ்செழியன் : இந்தக் கேள்வி, அலங்கா நல்லூர் ஆலையைப்பற்றியது. தனிக் கேள்வி போட்டால் உறுப்பினர் கேள்விக்கு விவரம் கொடுக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கோதண்டராமன், மதுரை மாவட்ட சர்க்கரை ஆலை பற்றி துணைக் கேள்வி ஒன்றைக் கேளுங்கள்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், போதுமான அளவிற்கு கரும்பு கிடைக்க, மேலும் போதுமான அளவிற்கு, அதிகப்படியான பங்குதார்களைச் சேர்த்துக்கொண்டு, கரும்பை அதிகப்படுத்துவதற்கு ஏற்பாடு செய்ய சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, 1–5–67-ல் ஏற்பட்டிருக்கிற புது நிர்வாகக் குழு இவற்றையெல்லாம் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறது. என்னென்ன நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்று பரிசீலனையின் இறுதியில் முடிவு செய்கிறார்களோ அதற்குத் தக்க முறையில் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சீமைச்சாமி தன் கேள்வியைக் கேட்பார்கள்.

திரு. கரு. சீமைச்சாமி : சார், தனியார் துறையில் இன்று டன் ஒன்றுக்கு ரூ. 75 அல்லது 80 வரை கிடைக்கிறது ; ஆனால், அலங்கா நல்லூர் ஆலையில் ரூ. 55 தான் கொடுக்கிறார்கள். ஆகவே, கரும்பு விலையைக் குறைத்திருப்பதால் கரும்பு கொடுக்கத் தயங்குகிறார்கள். அங்கே கரும்பு விலையை உயர்த்த சர்க்காருக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : காரணங்களை ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். அந்தக் காரணங்களிலே இதுவும் ஒரு காரணமாக இருந்தால், தக்க பரிகாரம் தேடப்படும்.

Ground water for agriculture

*118 *Q.*—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is a fact that Madras Government is contemplating to explore the availability of ground water for agricultural purposes in Cauvery Delta area with United Nations Aid Project ?

1967, ஜூன் 30]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆம். பூமிக்கடியில் உள்ள நீர் வளத்தைக் கண்டறிவதற்காகவும், வேளாண்மைத் தொழில்களுக்கு அந் நீரைப் பயன்படுத்துவதற்கான தொழில் நுட்ப சாத்தியக் கூறுகளைக் கண் டறிவதற்காகவும் ஐக்கியநாடுகள் தனி நிதி உதவியுடன் பூமிக்கடியில் உள்ள தண்ணீர் ஆய்வுத் திட்டத்திற்காக காவிரி சங்கமுகப் பகுதி உட்பட்ட நான்கு பகுதிகளை திட்ட அதிகாரிகள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

திரு. கே. விநாயகம் : இப்படி ஐக்கிய நாட்டு உதவியை வைத்து காவிரி சங்கமம் ஆகும் இடத்தில் ஏற்படுத்தப்படும் திட்டத்தின் மூலம் எந்த அளவுக்கு தண்ணீர் விவசாயத்திற்குக் கிடைக்கும் என்று கருதப் படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த ஆராய்ச்சிகள் இப்பொழுது தான் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சென்னைப் பக்கத்தில் ஆராய்ச்சி நடைபெற்று பூர்த்தியாகும் நிலையில் இருக்கிறது. இந்தக் கேள்விக்கு விவரங்களை இப்பொழுது அளிக்க முடியவில்லை.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, இதற்கு ஐ.நா. எவ்வளவு பணம் கொடுக்கிறது, அதற்கு ஏதாவது நிபந்தனைகள் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : நிபந்தனை எதும் இல்லை. இதற் காக அவர்கள் ரூ. 123 லட்சமும், நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரை 85 லட்சம் என்று அதில் அலுவலர்கள் என்ற வகையில் 11 லட்சம் கழித்துக்கொண்டு போனது போக பாக்கி 74 லட்சமும் கொடுக்கிறார்கள். அவர்கள் இரண்டு கட்டமாகக் கொடுக்கிறார்கள்.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : தஞ்சாவூரில் காவிரி டெல்டாவில் பூமிக்கு அடியில் இருக்கும் தண்ணீரை எடுத்துக் கொண்டால் வளம் பெறும் என்று வர்ல்ட் பாங்கு மிஷன் தெரிவித்தார்களே, அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த சிபாரிசு அடிப்படையில் தான் இந்த முயற்சிகள் நடைபெறுகின்றன. தஞ்சைப் பகுதியில் 41 ட்ரில்கள், துளைகள் போட்டு ஆராய்ச்சி நடத்திக் காரியங்கள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. மேலும் கொள்ளிடப் பகுதியில் மூன்று இடங்களில் வெற்றிகரமாக நடந்திருக்கிறது. கொள்ளிடக்கரை குறிச்சி என்ற கிராமம், இன்னும், அதன் அருகாமையில் இருக்கும் கிராமம், இங்கேயெல்லாம் வெற்றிகரமாக நடைபெற்று இருக்கிறது.

திரு. து. ப. அழகமுத்து : தலைவர் அவர்களே, இந்த காவிரி டெல்டாவில் நான்கு இடங்களில் நடந்திருப்பதாகச் சொன்னார்கள். அந்த இடங்கள் எவை எவை என்று அறிவிக்க முடியுமா ? சாதனை எந்த அளவுக்கு வெற்றி கொடுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அந்த நான்கு இடங்கள், சென்னை நகரமும், அதைச் சுற்றியுள்ள பகுதியும், பாலாறு பகுதி, நெய்வேலிப் பகுதி, காவிரி கழிமுகப் பகுதி. இவற்றில் நான் தொடக் கத்தில் குறிப்பிட்டபடி, சென்னை நகரமும் அதன் சுற்றுப்புறமும் என்கிற பகுதியில், குறிப்பாக ஆரணியாறு, கொற்றலையாறு போன்ற பகுதிகளில் ஆராய்ச்சி நடைபெற்று இருக்கிறது. முதல் கட்டமாக நடந்த இந்த ஆராய்ச்சியில், 7 லட்சம் காலன் தண்ணீர் எடுக்க வழி கோலப்பட் டிருக்கிறது. மேலும் மேலும் அதை தீவிரப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

Thiru T. MARTIN : Mr. Speaker, Sir, may I request the Hon. Minister to state whether there is any proposal to extend this exploration work ,to other areas like the Tambaraparani river bed ?

[1967, ஜூன் 30

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த நான்கு முயற்சிகளும் நடைபெற்று முடிந்த பிறகு அதுபற்றி யோசிக்கப்படும்.

திரு. க. மு. ராஜகோபால் : தலைவரவர்களே, பாலாற்றின் அடியில் நீரோட்டம் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே, எப்போது அதன்மீது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்த ஆராய்ச்சி மூன்று கட்டமாக நடைபெறுகிறது. முதல் கட்டமாக பூகர்ப்ப ஆராய்ச்சி. அவைகளிலே கிணற்று நிலைகள், அளவுகள் முதலியவைபற்றி ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. அடுத்து பூமியின் அமைப்பு எப்படியிருக்கிறது என்பதும், ஆழமாக இருக்கிறதா என்பதும், கற்பாறைகள் எந்த நிலையில் இருக்கின்றன என்பதும் ஆராயப்படும். மூன்றாவது, ட்ரில் மூலம் துளைபோடுகிற ஆராய்ச்சி நடைபெறும்.

திரு. க. ர. நல்லசிவன் : தற்போதுள்ள சர்க்கார் உத்தரவுகள் ஆற்றோரங்களிலோ, கால்வாய் ஓரங்களிலோ கிணறுகள் வெட்டக்கூடாதென்று இருக்கிறது. ஆனால் இந்தப் புதிய கண்டுபிடிப்புகள் அங்கு இப்பொழுது கிணறுகள் வெட்டுவதற்கான வசதியைச் செய்து கொடுக்கிறதா ? ஆற்றோரங்களின் பக்கத்தில் குறிப்பிட்ட அளவு கிணறுகள் வெட்டக்கூடாது என்று ஒட்டு மொத்தமாக இந்த ராஜ்யம் பூராவும் இருக்கும் உத்தரவை அகற்ற முயற்சி எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ஆற்றோரங்கள் என்பது ஆற்றோரங்களுக்கு அருகாமையில், அந்த தீரங்களில் என்று அர்த்தம்.

திரு. சௌடி. எஸ். சுந்தர பாரதி : ஆற்றோரங்களில் அல்லாத சற்றுத் தள்ளி மிகவும் வறட்சியாக இருக்கக்கூடிய பகுதியாகவுள்ள இராமனாதபுரம் பகுதியில் பல இடங்களில் பூமிக்கடியில் நல்ல நீர் இருப்பதாகச் சொல்லப்படுகிறதே. அந்த இடங்களில் இம்மாதிரி பரிசோதனை நடத்த உத்தேசம் இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது நான்கு திட்டங்கள் எடுக்கப்படுகின்றன. இவை முடிவான பிறகு அவற்றைப்பற்றி ஆராயப்படும்.

திரு. கே. விநாயகம் : இப்பொழுது துவங்கப்பட்டிருக்கிற இந்த நான்கு கட்டங்களும் உத்தேசமாக எந்தக் கால வரம்புக்குள்ளே முடியும்? இதிலே சென்னையில் துவக்கப்பட்ட இந்த ப்ராஜக்டின் விளைவாக சென்னை நகரின் மக்களுக்குக் குடிதண்ணீர் கொடுக்க முடியுமா ? இன்னும் வேறு ஏதாவது விவரங்கள் அமைச்சரவர்களிடம் இருந்தால் சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது குறிப்பாக 1970-ம் ஆண்டுக்குள்ளாக முடியுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. நான் ஏற்கனவே சொன்னபடி சென்னையைப் பொறுத்தவரை ஆரணியாறு, கொற்றலியாறு பகுதிகளில் இந்த ஆராய்ச்சி நடைபெற்று அதன்மூலம் ஏழு லட்சம் காலன் தண்ணீர் மணலியிலுள்ள எண்ணெய்ச் சுத்திகரிப்புத் தொழிற்சாலைக்குப் பயன்படுத்த வேண்டுமென்று கருதப்பட்டது. இப்பொழுது அந்த எண்ணெய் சுத்திகரிப்பு தொழிற்சாலைக்கு 35 லட்சம் காலன் வேண்டுமென்று கருதப்படுகிறது. பிறகு ரசாயன எரு உற்பத்தி ஆரம்பிக்கும்பொழுது முதலிலே 75 லட்சம் காலன் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். அத்துடன் சென்னை நகருக்குக் குடிதண்ணீர் வழங்கும் காரியத்தையும் அது மேற்கொள்ளலாம். அந்த முயற்சியும் வெற்றிகரமாக நடைபெறலாம் என்று திட்ட அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.